# யார் இந்த வஹாபிகள்?



*பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்*

# யார் இந்த வஹாபிகள்?

**அறிமுகம்:**

*சியோனிஸ சிந்தனை, அமெரிக்க அனுசரணை, சவூதி நிதி ஆகிய மும்மூர்த்திகளின் ஆதரவுடன் இன்று இஸ்லாமிய உலகில் பித்னாக்களையும், பித்தலாட்டங்களை உண்டுபண்ணுவதில் முன்னோடிகளாகச் செயற்படும் வஹாபிஸம் ஏன் உருவானது? எப்படி வளர்ந்தது? எங்கிருந்து அதற்கான விதைகள் தூவப்பட்டுள்ளன என்பதை வரலாற்று மற்றும் அறிவுப் பின்னணியுடன் அலசிப் பார்க்க வேண்டிய தேவை தற்போது உள்ளது. மனிதாபிமானத்திற்கும் நீதிக்கும் எதிராகச் செயற்படும் இந்தத் தீவிரவாதிகளின் கூட்டத்தில் ஆயிரம் ஆயிரம் யசீதுகளும் ஹிட்லர்களும் இன்னும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.*

*முஸ்லிம்கள் தமது சமயத்தையும், தமது சகோதர சமூகத்தையும் பாதுகாக்கவும் தூய இஸ்லாமிய சட்டங்களை அழிவிலிருந்து மீட்கவும் ஷரீஆவை சரிவிலிருந்து காக்கவும் வஹாபிஸம் பற்றிய தெளிவும் அறிவும் அவசியமாகும். இல்லையெனில், நாளை நாமும் இந்தக் காட்டுமிராண்டுகளில் ஒருவராகச் சித்திரிக்கப்படலாம்.*

*அதன் விளைவு அவர்களின் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளால் உணர்ச்சியூட்டப்படும் ஏனைய இனத்தவர்களும், சமயத்தவர்களும் வன்முறைகளைக் கையிலெடுக்கும் போது பாதிக்கப்படுவது எமது ஒட்டுமொத்த சமூகத்தின் வளங்களான உயிர்களும், உடமைகளும், மானங்களுமே. அப்போது அவர்கள் நாம் வஹாபிகளா? இல்லையா? என்று ஆராய்ச்சி நடத்தமாட்டார்கள்.*

*அதிலும் இலங்கை போன்ற முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாட்டில் எமக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளையும், சலுகைகளையும் சரியாகப் பயன்படுத்த வேண்டும். அதில் அத்துமீறக் கூடாது. அல்லது அதனை சில்லறைகளுக்கும் சுயநலத்திற்கும் இயக்க வெறிக்கும் தவறாகப் பயன்படுத்தக் கூடாது.*

*இப்படி இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் தேசிய மற்றும்*

சர்வதேசிய ரீதியில் பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் வஹாபிஸத்தின் அடிவேர் எங்கு எப்போது யாரால் விதைக்கப்பட்டது என்பதை ஆய்வுடனும் அறிவுடனும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் வஹாபிஸத்தின் உண்மை முகத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

**வரலாறு**

**உமையாக்கள்:**

வஹாபிகளின் உண்மையினை வரலாற்று வழியாகத் தேடுகின்ற போது, இஸ்லாமிய கிலாபத்தை ஜனநாயகப் பண்புகளிலிருந்து சர்வாதிகாரப் பண்புக்கு மாற்றிய உமையாக்களின் மன்னராட்சி தர்பார்களிடமிருந்தே இந்த வஹாபிஸம் உருவாகியுள்ளதை அவதானிக்கலாம். இந்த உண்மைகளை இஸ்லாம் அல்லாத ஆய்வாளர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பதை, அஹ்மத் ரஷீத் என்ற இஸ்லாமிய எழுத்தாளர் எழுதியுள்ள ஜேர்மன் நாட்டை சேர்ந்த அறிஞர் ஒருவரின் பின்வரும் கூற்று உறுதிப்படுத்துகின்றது.

“உமையா ஆட்சியாளருக்கு எமது நாட்டின் தலைநகரில் (பெர்லின்) தங்கச்சிலை வைத்தாலும் ஈடாகாது. நிச்சயமாக அவர் இஸ்லாமிய ஆட்சியினை ஜனநாயகப் பண்புகளிலிருந்து சர்வாதிகாரத்திற்கு மாற்றியிருக்கவில்லை எனில், உலகம் முழுவதும் இஸ்லாம் பரவியிருக்கும். உலகிலுள்ள எல்லோரும் முஸ்லிம்களாக மாறியிருப்பர். ஐரோப்பியக் குடிகளான நாமும் அரேபிய முஸ்லிம்களாக மாறியிருப்போம்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆட்சியினையும் அதிகாரத்தையும் தக்க வைத்துக் கொள்ள இஸ்லாம் போதிக்கின்ற எல்லா கட்டளைகளையும் மறந்துவிட்டு அல்லது மறைத்துவிட்டு அதிகாரத்தையும் ஆட்பலத்தையும் நம்பியே உமையாக்கள் தமது ஆட்சியினை நிலைநிறுத்திக் கொண்டனர். அவர்களின் எதிரிகளை பணம் பதவி மூலம் விலைக்கு வாங்கினர். அதற்கு ஒத்து வராதவர்களை குரூரமாகக் கொலைசெய்து ஏனையவர்களை அச்சுறுத்தினர். ஆகவே, உமையாக்கள் பணம், பதவி, பயம் ஆகியவற்றை மூலதனமாக்கியே ஆட்சியினையும்

அதிகாரத்தையும் தக்கவைத்துக் கொண்டனர்.

எனவே, உமையா வம்சாவழித் தோன்றல்களாக உள்ள அல்லது உமையாக்களது சிந்தனை, செயற்பாடு மற்றும் கொள்கை என்பவற்றில் ஒன்றுபட்டவர்களாக உள்ள வஹாபிகள், அந்த உமையாக்களது செயற்பாடுகளையும் சிந்தனைகளையும் நியாயப்படுத்துவதும் அவற்றைப் பின்பற்றுவதும் வியப்புக்குரியதல்ல.

இன்றும் வஹாபிய கூலிப்படைகள் மத்திய கிழக்கில் இஸ்லாத்தின் எதிரிகளான இஸ்ரேல், அமேரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளுடன் பலமான உறவுகளைப் பேணிவரும் அரேபிய மன்னர்களையும் அவர்களது ஆட்சியினையும் பாதுகாப்பதில் காட்டும் அக்கறை வஹாபிஸத்தின் வரலாற்றுப் பின்னணியினைத் தெளிவாக அடையாளப்படுத்துகிறது.

அது மாத்திரமன்றி, மார்க்கத்தில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்காகவும் அடுத்தவர்களைக் குற்றம் காண்பதற்காகவும் முன்னிறுத்தும் ஷரீஅத் ரீதியான முரண்பாடுகளையும் அந்த உமையாக்களிடமிருந்துதான் இந்த வஹாபிகள் பெற்றுக் கொண்டுள்ளார்கள்.

**மர்வான் பின் ஹகம் (மரணம் ஹி 61)**

அபு அய்யூப் அல்அன்சாரீ என்ற நபித்தோழர் நபி (ஸல்) அவர்களின் கப்றை தரிசித்து அவர்களின் கப்ரின் மீது முகம் வைத்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த, உமையா கலீபா மர்வான் பின் ஹகம், இவரைத் தடுக்கும் முகமாக “நீ என்ன செய்கிறாய் என்று தெரியுமா?” என அதட்டினான். “நான் இங்குள்ள கற்களுக்காக வரவில்லை, இறைத்தூதருக்காக வந்தேன். அந்த இறைத்தூதர் சொல்ல நான் கேட்டுள்ளேன்: “மார்க்கத்தின் பொறுப்பாளர்களாக அதற்குத் தகுதியானவர்கள் இருக்கும் வரை நீங்கள் அழவேண்டாம். ஆனால் தகுதியற்றவர்கள் அப்பொறுப்பில் அமர்ந்தால் அழுங்கள்” என்று” என அந்நபித் தோழர் மர்வானுக்கு பதிலுரைத்தார். (நூல் முஸ்தத்ரகுல் ஸஹீஹைன் பாகம்5 பக்கம் 515) வஹாபிகளின் முதன்மையான பிரசாரமாக உள்ள கப்றுகளை கண்ணியப்படுத்துவதைத் தடுக்கும் வழக்கத்தை மர்வானே

*அறிமுகப்படுத்தியுள்ளான்.*

***ஹஜ்ஜாஜ் பின் யூசுப் (மரணம் ஹி 95)***

*மதீனாவில் நபிகளாரின் கப்றை சுற்றிக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்து உமையா ஆட்சியாளன் ஹஜ்ஜாஜ் பின் யூசுப் பின்வருமாறு கூறினான்: "இவர்களுக்கு நாசம் உண்டாகட்டும். இவர்கள் அழிந்து போன சதையினையும் இறந்துபோன எலும்புகளையும் சுற்றுவதற்குப் பதிலாக மன்னர் அப்துல் மலிகின் அரண்மனையினைச் சுற்றலாமே. நிச்சயமாக ஒருவரது தலைவர் அவரது ரசூலை விட மேலானவராவார்" என்றான். (நூல் அல் பக்துல் பரீத் பக்கம் 1393) கப்றுகளை தரிசிப்பதைத் தடுக்கும் வழக்கம் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுபினாலேயே உருவாக்கப்பட்டுள்ளது.*

***ஹஸன் பின் அலி பிர்பஹாய் (மரணம் ஹி 329)***

*உமையா சிந்தனையில் வளர்க்கப்பட்ட ஹஸன் பின் அலி பிர்பஹாய் எனும் மற்றொரு ஆலிம், கப்றுகளை சியாரத் செய்வதையும், இமாம் ஹுஸைனுக்காக இரங்கல் பாடுவதையும் தடுத்ததுடன் இமாம் ஹுஸைனின் பேரப்பிள்ளைகளைக் கொலை செய்வதை அனுமதிக்கும் சட்டத்தையும் வெளியிட்டான். அஹ்லுல்பைத்துகளைக் கொல்வது நன்மையான விடயம் என்னும் வஹாபிகளின் தற்போதைய காட்டுமிராண்டித்தனமான பிரசாரத்தின் பிதா இவனேயாகும்.*

*இவர்களைத் தவிர, இப்னு பத்தாஹ் (மரணம் 383), உபைதுல்லாஹ் இப்னு முஹம்மத் இப்னு ஹமதால் அக்பரீ ஆகியோர் கப்றுகளை சியாரத் செய்வதைத் தடுத்ததுடன், ஷபாஅத் பற்றிய விடயத்தையும் மறுத்துரைத்தனர்.*

***இப்னு தைமியா (மரணம் ஹி 728)***

*இவர்களுக்குப் பின் தோன்றிய இப்னு தைமியா, வஹாபி சிந்தனையின் சிற்பியாகக் கருதப்படுகின்றார். தகியுத்தீன் அஹ்மத் பின் அப்துல் ஹலீம் பின் தைமிய்யா எனும் முழுப் பெயர் கொண்ட இந்த வஹாபி சிந்தனைச் சிற்பியின் பிரதானமான சிந்தனைகள் வருமாறு:*

- *இறைவனுக்கு உருவம் உண்டு, உடலுறுப்பும் உண்டு. அவனது இருப்பும் செயற்பாடும் வரையறுக்கப்பட்டவை.*
- *கப்றுகளை தரிசித்தல் பற்றி கூறப்படும் சகல ஹதீதுகளும் பலவீனமானவை.*
- *முஸ்லிம்களின் சகல பிரிவினரும் ஏற்றுக் கொண்டுள்ள பொதுவான விடயங்களை (மீலாதுந்நபி, கப்றுகளை தரிசித்தல், ஈஸாலுல் தவாப், வஸீலா, ஷபாஅத் போன்றவற்றை) தூற்றுதல். அத்தகைய விடயங்களை நடைமுறைப்படுத்துபவர்களை முஷ்ரிக்குகள் என அடயாளப்படுத்தல்.*
- *ஷபாஅத் ஹராமான காரியம். அதனைப் புரிபவர் தௌபா செய்ய வேண்டும் அல்லது கொலை செய்யப்பட வேண்டும்.*
- *தனது சிந்தனைக்கு முரண்படுகின்ற சகல ஹதீஸ்களையும் ஹதீஸ் கலை அறிஞர்களையும் அவமதித்தலும் அவதூறு கூறலும்*

*(மேற்கோள் நூல்கள்: இப்னு தைமியாவின் மின்ஹாஜுல் சுன்னா சியாரதுல்குபூர். அத்தவஸ்ஸுல்வல்வஸீலா)*

## *முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் (பிறப்பு ஹி 1115)*

*வஹாபிஸ சிந்தனையின் அடிவேர்கள் உமையாக்களின் ஆரம்பம் முதல் இப்னு தைமியா வரை கட்டமைக்கப்பட்ட போதும் அது மக்கள் மயப்படுத்தப்பட்ட கருத்தியலாக மாறி இருக்கவில்லை. அதற்கு இரு காரணிகள் இருந்தன.*

*முதற் காரணி: உமையாக்களின் சர்வாதிகார மன்னர்களிடம் காணப்பட்ட சமய சார்பின்மையும் சிந்தனைச் செயற்பாடுகளில் ஈடுபாடின்மையும். அவர்கள் தமது காரியங்களைச் சாதித்துக் கொள்ள எப்போதும் அதிகாரத்தையும் பலப்பிரயோகத்தையுமே நம்பி இருந்தனர். மக்களை அடிமைப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தினர். இதனால் சிந்தனைகளை உருவாக்கவும் வளர்த்தெடுக்கவுமான அவசியம் உணரப்படவில்லை.*

இரண்டாவது காரணி: பகுத்தறிவை முற்றாக மறுத்தல், ஹதீஸ்களை முன்னுரிமைப்படுத்தல் போன்ற கோட்பாடுகளினால் இப்னு தைமியா மற்றும் இப்னு கய்யிம் போன்ற கடும்போக்கு சிந்தனையாளர்களால் தமது கொள்கையை முழுமையாக ஏற்றுக் கொண்ட மக்கள் கூட்டத்தை உருவாக்க முடியவில்லை. இந்த கோட்பாட்டாளர்களிடம் காணப்பட்ட சிந்தனைகள் மக்களை ஈர்க்கும் வீரியம் கொண்டதாகக் காணப்படவில்லை. அத்துடன் இவர்களுக்கு அதிகார வர்கத்தினரின் ஆதரவும் கிடைக்கவில்லை.

இப்படி வலுவிழந்து காணப்பட்ட கடும்போக்கு சிந்தனை முஹம்மத் இப்னு அப்துல் வஹாபின் வருகையின் பின் புதியதொரு உத்வேகம் பெற்றது. வஹாபிஸம் என்ற புதிய பெயரும் கிடைத்தது. முஹம்மத் இப்னு அப்துல் வஹாபினது வெற்றியின் இரகசியம் என்ன என ஆராய்கின்ற போது, அவரது வெற்றிக்கான காரணிகளாகப் பின்வரும் விடயங்களை அடையாளப்படுத்திக் கொள்ள முடியும்.

- நஜ்த் பிரதேசத்தில் காணப்பட்ட சூழலும் கலாசாரமும்
- சவூதிய வழிப்பறிக் கொள்ளைக் கூட்டத்திலிருந்து கிடைக்கப் பெற்ற இராணுவ மற்றும் அரச உதவிகள்
- பிரித்தானியாவின் உளவாளி மிஸ்டர் ஹம்பரின் திட்டமிடலும் வழிகாட்டலும்
- ஏகாதிபத்தியத்தின் இஸ்லாத்திற்கு எதிரான கூட்டுச் சதியும் செயற்பாடும்

இவற்றோடு, பிரித்தானிய வழிகாட்டலின் படி இப்னு அப்துல் வஹாப் முன்வைத்த பின்வரும் சதித் திட்டங்களும் அவரது வெற்றிக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்தன.

- உஸ்மானிய கிலாபத் ஆட்சியினை கவிழ்ப்பதும் மீண்டும் உருவாகாமல் தடுப்பதும்
- முஸ்லிம்கள் மத்தியில் தேசியவாதத்தையும் பிரிவினைவாதத்தையும் ஏற்படுத்தல்

- *ஆன்மீகம் சார்ந்த வணக்க வழிபாடுகளில் மாத்திரம் இஸ்லாமிய சட்டங்களைப் பின்பற்றல்*
- *முஸ்லிம்கள் மத்தியில் கல்வி சிந்தனை சார்ந்த செயற்பாடுகளில் மூளைச்சலவை செய்தலும் மட்டுப்படுத்தலும் (சில்லறைப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை வழங்குதல்)*
- *இஸ்லாமிய அரசு, கிலாபத் ஆட்சி, இமாமத் வழிகாட்டல் ஆகியவற்றிலிருந்து முஸ்லிம்களைத் தூரப்படுத்தல்*
- *அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளில் பொம்மை அரசாங்கங்களை நிறுவுதல்*

*இப்பின்னணிகளைக் கொண்டு இஸ்லாமிய விரோத சக்திகள் யாவும் இணைந்து வஹாபிய சிந்தனையினை வளர்ப்பதிலும் பாதுகாப்பதிலும் பொருளாதார மற்றும் பௌதீகம் சார்ந்த உதவிகளை போதியளவு வழங்கின. இன்று சியோனிச சிந்தனையும் அமெரிக்க அனுசரணையும் சவூதி நிதியும் உடந்தையாக இருப்பது போல் அன்றும் ஏகாதிபத்தியமும் முதலாளித்துவமும் உந்துசக்தியாகவும் உடந்தையாகவும் அமைந்தன.*

## வஹாபிஸம் - ஷீஆயிஸம் முரண்பாடுகள்

| விடயம் | வஹாபிகளின் கருத்து | ஷீஆக்களின் கருத்து |
|---|---|---|
| அல்லாஹ் | உருவம் உண்டு, உடலுறுப்பு உண்டு அவனது தாதும் சிபாதும் மட்டுப்படுத்தப்பட்டவை | உருவம் இல்லை, உடலுறுப்பு இல்லை, அவன் எதற்கும் நிகரற்றவன். அவனது தாதும் சிபாதும் மட்டுப்படுத்த முடியாதவை |
| அல்குர்ஆன் | வெளிப்படையான மொழிரீதியான கருத்து மாத்திரம் உண்டு | வெளிப்படையான மொழிரீதியான கருத்தும் ஆழமான உள்ரங்கக் கருத்தும் உண்டு |
| முஹம்மத் நபி (ஸல்) | சாதாரண மனிதர், சிறிய பாவங்கள் செய்யக் கூடியவர், தவறுக்கும் மறதிக்கும் ஆட்பட்டவர், மறுமையில் மாத்திரம் ஷபாஅத் செய்யக் கூடியவர். அவரைப் புகழ்வதோ அவருக்காக விழா எடுப்பதோ ஹராமாகும் | படைப்பினங்களில் முதன்மையானவரும், மிகச் சிறந்தவருமாகும். இம்மையிலும் மறுமையிலும் ஷபாஅத் செய்யும் சிறப்புடையவர். சிறிய பெரிய தவறுகளுக்கும் மறதிக்கும் ஆட்படாதவர் |
| அஹ்லுல்பைத் | அவர்களை நேசிப்பதோ பின்பற்றுவதோ அவசியமில்லை அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களை நினைவு கூர்வது ஹராம் | பரிசுத்தமானவர்கள் அசுத்தங்களில் இருந்து பாதுகாக்கப்பட்டவர்கள். அவர்களை நேசிப்பதும் பின்பற்றுவதும் கடமையாகும் |

| விடயம் | வஹாபிகளின் கருத்து | ஷீஆக்களின் கருத்து |
| --- | --- | --- |
| ஸஹாபாக்கள் | ஸஹாபாக்கள் பற்றி நிலையான கொள்கை இல்லை. தங்களுக்குள் மாறுபட்ட கருத்துக்கள் உண்டு. தேவையான போது தூக்கிப் பிடிப்பதும் தமது சிந்தனைக்கு முரண்படுகின்ற போது தூக்கி வீசுவதும் | சகலரும் சமமானவர்கள் அல்ல. முஹாஜிரீன்கள், அன்ஸாரிகள், இஸ்லாத்தில் முந்தி இணைந்தவர்கள் மக்கா வெற்றியின் பின் இணைந்தவர்கள் என்ற அடிப்படையில் அவர்களது சிறப்புகளில் படித்தரம் உண்டு. |
| பகுத்தறிவு | இஸ்லாமிய சட்ட மூலாதாரத்தில் பகுத்தறிவுக்கு எந்த இடமும் கிடையாது. அதைப் பயன்படுத்தவும் கூடாது. | இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களில் நான்காவது கூறு பகுத்தறிவு. எனினும், பகுத்தறிவை மாத்திரம் வைத்து தீர்வைப் பெற முடியாது. |
| மத்ஹப்கள் | மத்ஹப்களைப் பின்பற்ற கூடாது. அவ்வாறு பின்பற்றுபவர் பித்அத் வாதி, அவர் நரகம் நுழைவார். | ஒரு முஸ்லிம் முஜ்தஹிதாக இருக்க வேண்டும், அல்லது ஒரு முஜ்தஹிதைப் பின்பற்றுபவராக இருக்க வேண்டும். மத்ஹபுகளைப் பின்பற்றுபவர்கள் முஸ்லிம்கள். அவர்களுடன் சகோதரத்துவம் பேண வேண்டும். |

| விடயம் | வஹாபிகளின் கருத்து | ஷீஆக்களின் கருத்து |
|---|---|---|
| இமாம்கள் மற்றும் அவ்லியாக்கள் | இவர்கள் மார்க்கத்தில் குழப்பத்தையும் பிரிவினையையும் ஏற்படுத்தியவர்கள். இவர்களைப் பின்பற்றுவதோ கண்ணியப்படுத்துவதோ வழிகேடு, ஹராமாகும். | முஸ்லிம்களை குழப்பத்திலிருந்தும் வழிகேட்டிலிருந்தும் பாதுகாத்தவர்கள். அவர்களைப் பின்பற்றுவதும் கண்ணியப்படுத்தவதும் கடமையாகும். |
| ஏனைய இஸ்லாமிய இயக்கங்கள் | தமது சிந்தனையைப் பின்பற்றாத யாவரும் வழிகேடர்கள், பித்அத்வாதிகள் அல்லது இனைவைப்பாளர்கள். அவர்களது உயிர், பொருள் மானம் என்பவற்றை அழிக்கலாம், சூறையாடலாம். அவ்வாறு செய்வது மார்க்கத்தில் ஹலால். | கருத்து முரண்பாடு இயற்கையானது. ஒருவரின் கருத்தை மற்றவர் மதித்து வாழ வேண்டும். லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்ற இரு கலிமாக்களையும் மொழிந்த யாவரும் முஸ்லிம்கள். அவர்களின் உயிர், பொருள், மானம் என்பவற்றைப் பாதுகாப்பது மற்ற முஸ்லிமின் கடமையாகும். |

| விடயம் | வஹாபிகளின் கருத்து | ஷீஆக்களின் கருத்து |
|---|---|---|
| மத்ஹபுகளுக்கு இடையில் நல்லிணக்கம் | மத்ஹபைப் பின்பற்றும் நிலையில் ஒற்றுமைக்கான அழைப்பு நிராகரிப்பாகும். அது இஸ்லாத்தை விட்டும் தூரமாக்கும். இப்றாஹீம் நபியின் மார்க்கத்தை விட்டும் எம்மை அந்நியப்படுத்தும். | சமகாலத்தில் மிகப் பெரும் தேவை முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்துவதில் மத்ஹப் இடையிலான நல்லிணக்கம் ஆகும். மிகப்பெரும் பங்களிப்பு செய்யும் அப்படியான கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் நடத்துவது இஸ்லாமிய உலகிற்குச் செய்யும் மிகப்பெரிய நன்மையாகும். |
| தக்பீரிய சிந்தனை (பிறரை காபிர் என அழைத்தல்) | இதுவே வஹாபிஸத்தின் மூலவேர். அவர்களது சிந்தனைக்கு முரண்படும் அனைவரும் காபிர்கள், அந்தக் காபிர்களுக்கு இஸ்லாத்தில் எந்தப் பங்கும் கிடையாது. | தக்பீரி சிந்தனை ஹராமாகும். இரு கலிமாக்கள் கூறிய ஒருவரை காபிர் என அழைப்பது மார்க்க விரோத செயலாகும். யாருக்கும் அந்த உரிமை கிடையாது. உள்ளங்களை அறிபவன் அல்லாஹ் மாத்திரமே. |